**செய்தி வெளியீடு எண் : 102/2021** **நாள் : 26.04.2021**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்ட அரங்கில் இன்று (26.04.2021) இந்திய மருத்துவ கழகம் காஞ்சிபுரம், தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தனியார் மருத்துவமனை மற்றும் தனியார் பரிசோதனை மையங்களில் கொரோனா நோய் தொற்று கண்டறியும் பட்சத்தில் விரைந்து நடவடிக்கை எடுப்பது குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.**

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசோதனை மையங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முடிவுகளை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார் மேலும் கொரோனா உறுதி செய்யப்பட்ட மற்றும் உறுதி செய்யப்படாத முடிவுகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) இணையதளத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். தினமும் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வு முடிவுகளை மாலை 3 மணிக்கு மாவட்ட நிர்வாகத்திடம் தெரிவிக்கப்பட வேண்டும். தனியார் மருத்துவமனைகளில் ஆக்சிஜன் இருப்பு மற்றும் மருத்துவ உபகரணங்கள் தேவைக்கு ஏற்ப இருப்பு தயாராக வைத்துக் கொள்ளுமாறும் தெரிவித்தார். தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், பல்நோக்கு சிகிச்சை மருத்துவமனைகளில் சிறப்பு கொரோனா பிரிவு தொடங்கி கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

சிறு மருத்துவமனைகளில் கொரோனா நோய்த்தொற்று அறியும் பட்சத்தில் அருகில் உள்ள அரசு தலைமை மருத்துவமனைக்கு உடனடியாக தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார் மேலும் RTPCR பரிசோதனை முடிவில் நோய் தொற்று அறியாத பட்சத்தில் CT SCAN பரிசோதனை முடிவில் நோய் தொற்று அழியும் பட்சத்தில் உடனடியாக மாவட்ட சுகாதாரத் துறைக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் அதேபோல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் மருத்துவமனைகள் விரைந்து செயல்பட்டு நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சை அளித்து இறப்பு விகிதத்தை குறைக்க மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா. பன்னீர்செல்வம், மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குநர் மரு.ஜீவா, துணை இயக்குநர் மரு.பழனி, தனியார் மருத்துவமனை பிரிதிநிதிகள், மருத்துவ அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் காஞ்சிபுரம்.**